# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

CHAPTER 7 - COMMUNITY RADIOS OF DIFFERENT REGIONS IN INDIA

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# EXAMPLE FROM SOUTH INDIA

## தென்னிந்தியாவில் வெற்றிகரமாக இயங்கும் சமுதாய வானொலிகள்

CHAPTER – 7

EPISODE - 33

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# தென் இந்தியாவில் இயங்கும் கோத்தகிரி வானொலி நிலையம்.

- கோத்தகிரி சமுதாய வானொலியின் அலைவரிசை எண் 90.4 MHz
- இந்த சமுதாய வானொலி நிலையம் 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 ஆம் தேதி துவங்கப்பட்டது
- தினமும் 12 மணிநேரம் ஒலிபரப்பு செய்யக்கூடிய இந்த சமுதாய வானொலி நிலையம், காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை ஒலிபரப்பப்படுகிறது
- இந்த வானொலி நிலையத்தை சுற்றியுள்ள 15 முதல் 20 கிலோ மீட்டருக்குள் உள்ள கிராமங்களிலே ஒலிபரப்பப்படுகிறது

# இந்த சமுதாய வானொலியில் தொகுத்து வழங்கும் முக்கிய நிகழ்வுகள்:

- நாட்டுப்புறவியல், நாட்டுப்புற பாடல்கள், மற்றும் கலாச்சாரம், இயற்கை விவசாயம், கல்வி, உடல்நலம், ஆகிய நிகழ்ச்சிகளுக்கு இந்த சமுதாய வானொலியில் முக்கியத்துவம் தரப்படுகிறது.

- கோத்தகிரி சமுதாய வானொலியில் குறிப்பாக பழங்குடியின மக்கள் மக்களுக்கு ஆரம்பிக்கப்பட்டது.

- இது இவர்களின் சமூக மற்றும். பொருளாதார முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது.

# கோத்தகிரி வானொலி நிலையம்

- *Kotagiri* இந்த சமுதாய வானொலி குறிப்பாக பழங்குடியின இனத்தவர் நலனுக்காக அமைக்கப்பட்டது

- மேலும் அவரது அடையாளத்தை வெளிக்காட்ட இந்த சமுதாய வானொலி முக்கிய பங்கு வகிக்கிறது.

- கோத்தகிரி சமுதாய வானொலியில் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் இவர்களே பொருளடக்கத்தை தயாரித்து நிகழ்ச்சியாக வழங்குகிறார்கள்.

- வானொலி நிலையத்தில் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவே கோத்தகிரி சமுதாய வானொலி நிலையத்தின் முதல் வெற்றி எனலாம்.

# கோத்தகிரி வானொலி நிலையம்.

- இப்பகுதி மக்கள் கொடுக்கும் நிகழ்ச்சிநிரலை சமுதாய வானொலியில் ஒலிபரப்பு செய்து அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி. சமூகம் சார்ந்த பிரச்சினைகளை எவ்வாறு கையாளுவது போன்றவைகளை இந்த சமுதாய வானொலி மூலமாக பழங்குடியின மக்களுக்கு அறிவுரை வழங்குகிறது.
- இந்த சமுதாய வானொலியில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் அனைத்தும் அந்த கிராமத்தில் உள்ள முதியவர்களிடம் இயற்கை விவசாயிகளிடம் விவரங்களை சேகரித்து இந்த வானொலியில் ஒலிபரப்பப்படுகிறது.
- ஒலிபரப்பு செய்யப்படும் நிகழ்ச்சிகளைக் கேட்டு அங்குள்ள மக்கள் தங்கள் கருத்துக்களை சமுதாய வானொலி நிலையத்திற்கு தொலைபேசியின் வாயிலாக தெரிவிக்கின்றனர்.

# கோத்தகிரி வானொலி நிலையம்.

- இப்படி கருத்துக்களை தெரிவிப்பதனால் வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் தரம் உயர்ந்து கொண்டே செல்கிறது.
- கோத்தகிரி சமுதாய வானொலி நிலையத்தின் முதன்மையான நிகழ்ச்சி, *Meri prerna mera Hunar (My inspiration my skill)* இதனை முன்மாதிரியாக கொண்டு தாங்கள் செய்யும் கைவினை பொருட்களை விளம்பரப்படுத்தி வணிகம் செய்து வருகிறார்கள்.
- இதனால் இவர்களின் வாழ்க்கை மேம்பாடு அடைவது மட்டுமல்லாமல் பொருளாதார நிலையும் உயர்கிறது.
- இந்த சமூகத்தில் *Kota* சமூகத்தினர் தங்களது முக்கிய தொழிலான மண்பானை செய்யும் தொழிலை கொண்டிருக்கிறார்கள்.

# கோத்தகிரி வானொலி நிலையம்.

- இந்த *Kota* சமுகத்தினர் குறிப்பாக தமிழ்நாட்டில் இரண்டு இடத்தில் உள்ளனர்.
- அதில் ஒரு சமுகத்தினர் நீலகிரியில் உள்ள ஏழு கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள், இவர்கள் மண்பாண்டம் செய்யும் தொழிலை முக்கிய தொழிலாகவும், தனது சமய நம்பிக்கையாகவும் பார்க்கிறார்கள்.
- இவர்கள் செய்யும் கைத்தொழில் காலப்போக்கில் அழிந்து வருகிறது இதனால் இந்த சமூகத்தில் உள்ள பெண்களும் இந்த மண்பாண்டம் செய்யும் தொழிலைச் செய்து வருகிறார்கள்.
- இதுதான் இவர்களின் வாழ்க்கையின் முக்கிய வாழ்வாதாரமாக உள்ளது. இது நீலகிரியில் உள்ள மக்களை இணைக்கும் கருவியாக செயல்படுகிறது. கோத்தகிரி சமுதாய வானொலி *Kota* சமூகத்தினரை இணைக்கும் கருவியாக செயல்படுகிறது.

# கோத்தகிரி வானொலி நிலையம்

- கோத்தகிரி சமுதாய வானொலியில் ஒலிபரப்பாகும் பல நிகழ்ச்சிகள் அங்குள்ள மக்களை ஊக்குவிக்கிறது.
- நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பபப்படும் கருத்துக்களைக் கேட்டு பின் அதனையே பின்பற்றுகிறார்கள், இதனால் இந்த சமுதாய வானொலி மூலமாக பல செய்திகளை அறிந்து கொண்டு செயல்படுகின்றார்கள்.
- இப்பகுதியில் உள்ள உள்ளூர் கலைஞர்களை ஊக்கப்படுத்தி வெளி உலகத்துக்கு அவர்களை அடையாளப்படுத்துகிறது, இந்த சமுதாய வானொலி

# கோத்தகிரி வானொலி நிலையம்

- அது மட்டுமில்லாமல் அவர்கள் செய்யும் பாரம்பரிய தொழிலான கைவினைப் பொருட்களை சந்தையில் அறிமுகம் செய்து விற்பனை செய்ய பெரும் உதவியாகவும் கோத்தகிரி சமுதாய வானொலி உதவி`புரிகிறது.
- பழங்குடியின மக்களால் ஆண்டுதோறும் கோடை விழா கொண்டாடுகிறார்கள், அதில் தன் தொழில் திறன் மூலம் பழக் கண்காட்சி, காய்கறி கண்காட்சி ஆகியவை இங்கு இடம்பெறுகிறது.
- இந்த கண்காட்சியில் இவர்களது படைப்புகள் இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

# கோத்தகிரி வானொலி நிலையம்

- பழங்குடியின மக்களின் திறன் மேம்பாடு அடைவது மட்டுமல்லாமல் இவர்களின் திறமை உலகிற்கு வெளிப்படுத்தி, இவர்களின் பொருளாதார வாழ்வு மேம்பாடு அடைய இந்த கோத்தகிரி சமுதாய வானொலி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.